பெரியாழ்வார் அருளிச் செய்த
பெரியாழ்வார் திருமொழி
நான்காம் பத்து

முதல் திருமொழி - கதிராயிரம்
ஸர்வேஶ்வரனைக் காண வேணும் என்று தேடுவார் சிலரும், கண்டார் சிலருமாகக் கூறுதல்

** கதிர் ஆயிரம் இரவி * கலந்தெரித்தால் ஒத்த நீள்முடியன் *
எதிரில் பெருமை இராமனை * இருக்கும் இடம் நாடுதிரேல் **
அதிரும் கழல் பொரு தோள் * இரணியன் ஆகம் பிளந்தரியாய் *
உதிரம் அளைந்த கையோடிருந்தானை * உள்ளவா கண்டார் உளர் 1

நாந்தகம் சங்கு தண்டு * நாணொலிச் சார்ங்கம் திருச்சக்கரம் *
ஏந்து பெருமை இராமனை * இருக்கும் இடம் நாடுதிரேல் **
காந்தள் முகிழ் விரல் சீதைக்காகிக் * கடுஞ்சிலை சென்றிறுக்க *
வேந்தர் தலைவன் சனகராசன் தன் * வேள்வியில் கண்டார் உளர் 2

கொலை யானைக் கொம்பு பறித்துக் * கூடலர் சேனை பொருதழிய *
சிலையால் மராமரம் எய்த தேவனைச் * சிக்கென நாடுதிரேல் **
தலையால் குரக்கினம் தாங்கிச் சென்று * தடவரை கொண்டடைப்ப *
அலையார் கடற்கரை வீற்றிருந்தானை * அங்குத்தைக் கண்டார் உளர் 3

தோயம் பரந்த நடுவு சூழலில் * தொல்லை வடிவு கொண்ட *
மாயக் குழவி அதனை நாடுறில் * வம்மின் சுவடுரைக்கேன் **
ஆயர் மடமகள் பின்னைக்காகி * அடல் விடை ஏழினையும் *
வீயப் பொருது வியர்த்து நின்றானை * மெய்ம்மையே கண்டார் உளர் 4

நீரேறு செஞ்சடை நீலகண்டனும் * நான்முகனும் முறையால் *
சீரேறு வாசகம் செய்ய நின்ற * திருமாலை நாடுதிரேல் **
வாரேறு கொங்கை உருப்பிணியை * வலியப் பிடித்துக் கொண்டு
தேர் ஏற்றி * சேனை நடுவு போர் செய்யச் * சிக்கெனக் கண்டார் உளர் 5

பொல்லா வடிவுடைப் பேய்ச்சி துஞ்சப் * புணர் முலை வாய் மடுக்க
வல்லானை * மாமணிவண்ணனை * மருவும் இடம் நாடுதிரேல் **
பல்லாயிரம் பெருந்தேவிமாரொடு * பௌவம் எறி துவரை *
எல்லாரும் சூழச் சிங்காசனத்தே * இருந்தானைக் கண்டார் உளர் 6

வெள்ளை விளிசங்கு வெஞ்சுடர்த் திருச்சக்கரம் * ஏந்து கையன் *
உள்ள இடம் வினவில் * உமக்கிறை வம்மின் சுவடுரைக்கேன் **
வெள்ளைப் புரவிக் குரக்கு வெல்கொடித் * தேர் மிசை முன்பு நின்று *
கள்ளப் படைத் துணையாகிப் * பாரதம் கை செய்யக் கண்டார் உளர் 7

நாழிகை கூறிட்டுக் காத்து நின்ற * அரசர்கள் தம் முகப்பே *
நாழிகை போகப் படை பொருதவன் * தேவகி தன் சிறுவன் **
ஆழி கொண்டு அன்று இரவி மறைப்பச் * சயத்திரதன் தலையை *
பாழில் உருளப் படை பொருதவன் * பக்கமே கண்டார் உளர் 8

மண்ணும் மலையும் மறிகடல்களும் * மற்றும் யாவும் எல்லாம் *
திண்ணம் விழுங்கி உமிழ்ந்த தேவனைச் * சிக்கென நாடுதிரேல் **
எண்ணற்கரியதோர் ஏனமாகி * இருநிலம் புக்கிடந்து *
வண்ணக் கருங்குழல் மாதரோடு * மணந்தானைக் கண்டார் உளர் 9

** கரிய முகில் புரை மேனி மாயனைக் * கண்ட சுவடுரைத்து *
புரவி முகம் செய்து செந்நெல் ஓங்கி * விளை கழனிப் புதுவை **
திருவில் பொலி மறைவாணன் * பட்டர்பிரான் சொன்ன மாலை பத்தும் *
பரவு மனமுடைப் பத்தர் உள்ளார் * பரமனடி சேர்வர்களே 10

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்